## முன் மாதிரி முதல் இடைப் பருவத் தேர்வு — 1

**மேல்நிலை முதலாம் ஆண்டு**

**கணக்குப்பதிவியல்**

நேரம் : 1.15 மணி | மதிப்பெண் : 45

### பகுதி — I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $10 \times 1 = 10$

1. ஒரு வணிகம் பிறருக்கு செலுத்த வேண்டியவை -------- ஆகும்.
   அ) சொத்து ஆ) பொறுப்பு இ) முதல் ஈ) கடன்
2. GAAP என்பது ---------
   அ) பொதுவாக ஏற்றுக் கொள்ளடப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
   ஆ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
   இ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
   ஈ) இவற்றுள் ஏதுமில்லை
3. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது -----------
   அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்பு நிலைக் குறிப்பு ஈ) பேரேடு
4. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹ 80,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹. 20,000 எனில், அந்நிறுவனத்தில் முதல் -----------
   அ) ₹. 1,00,000 ஆ) ₹. 60,000 இ) ₹. 40,000 ஈ) ₹. 20,000
5. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
   அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல் இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்
6. முதன் முதலில் இரட்டைப்பதிவு முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர் ---------------
   அ) ஆர். என். கார்டர் ஆ) ஜே. அன். பேட்லிபாய்
   இ) லூகா பாசியோலி ஈ) கௌடல்லியர்
7. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது?
   அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்
   ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்
   இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்
   ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்
8. பொருத்துக :
   i) இரட்டைப்பதிவு – 1. கோஹ்லர்
   ii) கணக்கேடுகள் பராமரிப்பு – 2. லூகா பாசியோலி
   iii) கணக்கியல் தரநிலை – 3. கார்டர்
   iv) குறிப்பேடு – 4. ஜே. ஆர். பேட்லிபாய்

| | i) | ii) | iii) | iv) |
|---|---|---|---|---|
| அ | 2 | 4 | 1 | 3 |
| ஆ | 1 | 3 | 4 | 2 |
| இ | 3 | 2 | 4 | 1 |
| ஈ | 4 | 2 | 1 | 3 |



9. கீழ்கண்ட வாக்கியங்களைக் கருத்தில் கொள்க:
   கூற்று ( A ) : கணக்கியல் சுழல், நிறுவனங்களின் நிதியியல் நடவடிக்கைகளை அடையாளம் கண்டு, பதிவு செய்வதில் தொடங்கி, கணக்காண்டிற்குரிய இறுதிக் கணக்குகள் தயாரிப்பதில் முடிவடைகிறது.
   கூற்று ( B ) : முந்தைய ஆண்டின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் இறுதி இருப்புகளை, அடுத்தகணக்காண்டின் தொடக்க இருப்பாகக் கண்டு, கணக்கியல் சுழற்சியானது தொடர்கிறது.
   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் சரி ஆ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் தவறு
   இ. ( A ) சரி , ஆனால் ( B ) தவறு ஈ. ( A ) தவறு, ஆனால், ( B ) சரி
10. வேறுபட்ட ஒன்று எது?
    அ. முடிவெடுக்க உதவுதல் ஆ. முறையானபதிவேடுகள் இ) கட்டுப்பாடு ஈ. முன்னறிதல்

### பகுதி - II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $4 \times 2 = 8$

11. கணக்கியல் - வரையறு
12. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.
13. பேரேடு என்றால் என்ன?
14. பின்வருவனவற்றை கணக்கியல் சமன்பாட்டின் படி பதிவு செய்து காட்டுக.
    (அ) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹. 60,000
    (ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 20,000
15. பின்வரும் விவரங்களைக் கொண்டு இருப்பாய்வினை தயார் செய்யவும்.

| கணக்கின் பெயர் | தொகை ( ₹ ) | கணக்கின் பெயர் | தொகை ( ₹ ) |
|---|---|---|---|
| வாடகை | 7,000 | காப்பீட்டு முனைமம் | 1,200 |
| சட்டச் செலவுகள் | 3,000 | முதல் | 11,200 |

16. கீழ்கண்ட விவரங்களைக் குறிபேட்டில் பதிவு செய்க:
    அ) வங்கியில் செலுத்திய ரொக்கம் ₹. 2,500
    ஆ) வங்கியிலிருந்து கடன் பெற்றது ₹. 50,000

### பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $4 \times 3 = 12$

17. கணக்கியலின் பொன்னான விதிகள் யாது?
18. “இருப்பாய்வு என்பது கணக்கேடுகளில் உள்ள கணக்கீட்டின் சரித்தன்மையை அறிய உதவும் முதல் ஆதார ஆவணமாகும்” என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? காரணம் கூறவும்.
19. கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டை தயாரிக்கவும் :
    1) எழில் வியாபாரம் தொடங்கியது ₹. 75,000 2) சரக்கு கொள்முதல் செய்தது ₹. 25,000
    3) ஊதியம் ரொக்கமாக வழங்கியது ₹. 27,000

B. BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

20. பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| கணக்கின் பெயர் | தொகை ( ₹ ) | கணக்கின் பெயர் | தொகை ( ₹ ) |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,00,000 | கடனாளி | 1,50,000 |
| வங்கிகடன் | 75,000 | சரக்கிருப்பு | 35,000 |
| விற்பனை | 1,60,000 | கடனீந்தோர் | 50,000 |

21. பின் வருனவற்றிக்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.

(அ) சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்

(ஆ) ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்

(இ) ஒரு பொறுப்பு குறையும் போது, இன்னொரு பொறுப்பு அதிகரித்தல்

22. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக

(அ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்

45,000 = 19,000 + ?

(ஆ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்

1,15,000 = ? + 73,000

(இ) சொத்துகள் = முதல் + பொறுப்புகள்

? = 1,12,000 + 48,000

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

23. கீழ்காணும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதி இருப்பு காட்டுக.

| | | |
|---|---|---|
| 2017 ஜன 1 | தொழில் துவங்கியது | 50,000 |
| 3 | விற்பனை செய்தது | 2,000 |
| 7 | பிரேமிடமிருந்து கொள்முதல் செய்தது | 90,000 |
| 17 | பிரேமிற்கு சரக்கு திருப்பியது | 17,000 |
| 27 | பிரேமின் கணக்கைத் தீர்த்தது | |

( அல்லது)

திரு. காமேஷ் அவர்களின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளைக் கொண்டு 31. 12. 2017 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்க.

| | ₹. | | ₹. |
|---|---|---|---|
| ஊதியம் | 12,000 | வங்கிகடன் | 15,000 |
| கடனாளிகள் | 48,000 | பெற்ற தள்ளுபடி | 21,000 |
| சரக்கிருப்பு | 14,000 | கடனீந்தோர் | 29,000 |
| விற்பனை | 50,000 | செலுத்தற்குரிய | |
| எடுப்புகள் | 22,000 | மாற்றுச்சீட்டு | 17,000 |
| | | கொள்முதல் | 36,000 |

24. பின்வருவனவற்றை ஆள்சார்கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்ற வகைப்படுத்துக

(அ) முதல் (ஆ) கட்டடம் (இ) உள் ஏற்றிச் செல் செலவு (ஈ) ரொக்கம்
(உ) வங்கி (ஊ) சந்துரு (எ) தள்ளுபடி பெற்றது (ஏ) கொள்முதல்
(ஐ) சம்பளம் (ஒ) கொடுபடவேண்டிய கூலி

( அல்லது)



பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

**பிரதீப் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஆகஸ்ட் 1 | ----------- ப<br>----------- <br>( தொழில் தொடங்கியது ) | | 25,000 | ---------- |
| 13 | அலுவலக செலவுகள் க / கு ப<br>கொள்முதல் க / கு<br>( ---------------------------------) | | 1,000 | ---------- |
| 21 | ------------- ப<br>-----------<br>( வங்கியிலிருந்து எடுத்தது) | | ---------- | 12,600 |
| 25 | பாபு க / கு ப<br>விற்பனை க / கு<br>( ------------------- ) | | 12,000 | 12,000 |
| 26 | காப்பீட்டு முனைமம் க / கு ப<br>வங்கி க / கு<br>( ------------------- ) | | 1,5000 | --------- |
| 30 | ------------- ப<br>-----------<br>( விற்பனைக்கு பணவைப்பு இயந்திரம் மூலம் பெற்றது ) | | ---------- | 12,600 |

25. பின்வரும் வணிக நடவடிக்கைகளின் விளைவுகளை கணக்கியல் சமன்பாட்டில் காண்பிக்கவும்.

i) அன்பு, ரொக்கம் ₹ 20,000 ; சரக்குகள் ₹ 12,000 மற்றும் இயந்திரம் ₹ 8,000 ஆகியவற்றுடன் தொழில் தொடங்கினார்

ii) ரமணியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 7,000

iii) ரமணிக்கு ₹ 6,900 கொடுத்து கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது

iv) ₹ 5,400 மதிப்புள்ள சரக்குகள் கடனுக்கு இராஜனுக்கு விற்கப்பட்டது ₹ 6,000

v) இராஜனிடமிருந்து ₹ 5,800 பெற்றுக்கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது

( அல்லது)

திரு. பாபு ஏடுகளிலிருந்து 31.3.2018 அன்று எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும். ஏதேனும் வேறுபாடு இருப்பின் அதனை அனாமத்துக் கணக்கிற்கு மாற்றவும்.

| விவரம் | தொகை ₹ | விவரம் | தொகை ₹ |
|---|---|---|---|
| சரிகட்டப்பட்ட கொள்முதல் | 60,000 | விளம்பரம் | 4,000 |
| வாடகை செலுத்தியது | 2,000 | பொதுச் செலவுகள் | 1,000 |
| தள்ளுபடி பெற்றது | 1,000 | கழிவுசெலுத்தியது | 1,500 |
| உள்தூக்குக் கூலி | 2,700 | முதல் | 40,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 18,600 | விற்பனை | 48,000 |